**Source:** *Tamil Murasu,* p4
**Date:** 23 July 2021

# ஏழை, பணக்காரர் இடைவெளியை குறைக்கும் வரிவிதிப்பு முறை

சிங்கப்பூரில் செல்வவள ஏற்றத்தாழ்வு மீது கவனம் செலுத்த சொத்து அனுகூலன் வரி அல்லது வாரிசுரிமை வரி போன்ற வற்றுக்கான அவசியம் ஏற்படலாம் என மத்திய வங்கி எனப் படும் சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் நிர்வாக நியக்குநர் ரவி மேனன் தெரிவித்துள்ளார். இந்த ஏற்றத்தாழ்வானது பொது வீடமைப்பைக் காட்டிலும் தனியார் வீடமைப்பில் விலை தொடர்ந்து ஏற்றம் காணும்போது மோசமடையக் கூடும் என்று அவர் கூறியுள்ளார்.

கொள்கை ஆய்வுக்கழகம் நடத்திய விரிவுரை நிகழ்ச்சி யில் பங்கேற்று அவர் பேசினார்.

“உலகளவில் செல்வவளத்தில் காணப்படும் இடைவெளி விரிவடைவதற்கு சொத்து முதலீடுகளே முக்கிய காரணம் என்பது காலம் காலமாக இருந்து வரும் நிலைமை.

“அதிக வருவாய் உள்ளோர் சொத்துச் சந்தையில் பெரிய முதலீடுகளை செய்கிறார்கள். காலப்போக்கில் அந்த முதலீடுகள் மூலம் கிடைக்கும் பலன்களை அவர்கள் அனுபவிக்கிறார்கள். இதுபோன்ற அனுபவம் குறைந்த வரு மானம் ஈட்டுவோருக்குக் கிடைப்பதில்லை.

“வேலை வருமானம் தொடர்பான தரவுகளைக் கொண்டி ருந்த போதிலும் செல்வம் தொடர்பான சிறப்பான தரவுகள் சிங்கப்பூரிடம் இல்லை,” என்று திரு மேனன் குறிப்பிட்டார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.